14.08.2024

O.S.NO. 92/2019

PW1 திரு.பச்சையப்பன் (பிரதிவாதி தரப்பு குறுக்கு தொடர்ச்சி:-

சாட்சி வா.த.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

கேள்வி-

தாவா சொத்து எந்த வருடம் வாங்கப்பட்டது?

பதில்-

10.10.1973ல் வாங்கப்பட்டது.

கேள்வி-

தாவா சொத்து வாங்கப்பட்ட தேதியில் நீங்கள் என்ன வேலை பார்த்தீர்கள்?

பதில்- தமிழ்நாடு மின்சார வாரியத்தில் முதல்நிலை போர்டுமேனாக பணிபுரிந்தேன்.

கேள்வி-

எந்த வருடம் போர்டுமேனாக பதவி உயர்வு பெற்றீர்கள்?

பதில்- 1987ல் 1ல் நிலை போர்டுமேனாக பதவி உயர்வு பெற்றேன். நான் வேலையில் சேரும் பொழுது வெல்டராக பணியில் சேர்ந்தேன்.

கேள்வி- தாவா சொத்து வாங்கப்பட்ட தேதியில் என்னுடைய சம்பளம் எவ்வளவு என்பதைக் காட்ட ஆவணம் எதனையும் தாக்கல் செய்திருக்கின்றீர்களா?

பதில்- ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

கேள்வி- எந்த வருடத்தில் இருந்து நான் என்னுடைய மனைவியை பிரிந்து வாழ்ந்து வருகிறீர்கள்?

பதில்- நான் என்னுடைய மனைவியை எப்பொழுதும் பிரிந்து வாழவில்லை. போக்குவரத்து இருந்தது மாதம் மாதம் சம்பளம் வாங்கி கொடுப்பேன்.

கேள்வி- என்னுடைய முதல் விசாரணையில் என்னுடைய முகவரி என்னவென்று கொடுத்திருக்கின்றீர்கள்?

பதில்- கொடுங்கையூர் முகவரி கொடுத்திருக்கின்றேன்.

கேள்வி- பி.சா.ஆ.4ல் வாக்காளர் அடையாள அட்டையில் கொடுங்கையூர் முகவரி தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியா?

பதில்- சரிதான்.

கேள்வி- தாவா சொத்தில் எத்தனை கடைகள் இருக்கின்றன?

பதில்- 4 கடைகள் இருக்கின்றது.

கேள்வி- அந்த 4 கடைகளிலும் யார் வாடகை வாங்கி வருகின்றார்கள்?

பதில்- அந்த 4 கடைகளில் 2 கடைக்கு நான் வாடகை வாங்குகின்றேன். மீதமுள்ள 2 கடைக்கு என்னுடைய மனைவி வாடகை வாங்கி உணவு மற்றும் மருத்துவ செலவை பார்த்துக்கொண்டு வருகின்றார்.

கேள்வி- என்னுடைய முதல் விசாரணையில் பத்தி 7ல் அண்ணா நகரில் உள்ள பிளாட்டினை ரூ.40 லட்சத்திற்கு விற்றேன் என்று கூறியிருக்கின்றேன் என்றால் சரியா, இல்லையர்?

பதில்- சரிதான் 40 லட்ச ரூபாய்க்கு விற்பனை செய்தேன்.

கேள்வி- அந்த பணத்தில் ரூ.23,50,000/-யை குணசேகரன், சந்திரா, ராணி மற்றும் வடிவு ஆகியோருக்கு கொடுத்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியா இல்லையா?

பதில்- சரிதான்.

கேள்வி- அதற்கான விற்பனை ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா?

பதில்- தாக்கல் செய்யவில்லை. சாட்சி தற்போழுது நினைவில்லை என்று கூறுகின்றார்.

கேள்வி- அந்த ஆவணத்தை தாக்கல் செய்தால் உண்மை நிலவரம் தெரியவரும் என்பதால் தான் அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியா இல்லையா?

பதில்- சரியல்ல

கேள்வி- அதேபோல் ஆவடி, காக்களூர் ஆகிய இடங்களில் எனது பெயரிலும், எனது மகள்கள் பெயரிலும் பிளாட்டுகள் வாங்கியதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியா இல்லையா?

பதில்- நான் அப்படி சொல்லவில்லை

கேள்வி- நான் என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ள சொத்துக்களின் ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியா இல்லையா?

பதில்- ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை.

கேள்வி- அதேபோல் எனது முதல் விசாரணையில் சொல்லியிருக்ககூடிய பண வரவு மற்றும் செலவு பற்றிய தகவல் அனைத்தும் தவறானவைகள் என்றால் சரியா இல்லையா?

பதில்- சரியல்ல

சாட்சியின் நடத்தை பற்றிய குறிப்பு-

சாட்சி வயதானவராகவும், காதுகோளாதாவராகவும் இருந்தார். அவர் காது கேளாத நிலையில் இருந்தார். எனவே கேள்விகள் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியானவர் அதனைப்பார்த்து பதில் அளித்தார்)

(அறிவார்ந்த பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்டுகின்றது).